தினமணி

ரூ.3,000 கோடி பயிர் கடன்

First Published : 10 Dec 2011 01:32:42 PM IST

தொழில் முனைவோருக்கு உதவியாக செயல்பட வேண்டும் என கூட்டுறவு வங்கிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். மாநிலத்தில் பயிர்க் கடனாக ரூ.3,000 கோடி தரப்பட்டுள்ளது. 483 பகுதிநேர ரேஷன் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் இதுவரை 71 பகுதி நேர ரேஷன் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன. 5.77 லட்சம் ரேஷன் அட்டைகளுக்கு 20 கிலோ இலவச அரிசியும், 68,876 அட்டைகளுக்கு 35 கிலோ அரிசியும் தரப்படுகிறது.

மாவட்டத்தில் ரூ.212 கோடி பயிர்க் கடன் வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.136 கோடி தரப்பட்டுள்ளது. 326 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.82 லட்சம் கடனுதவி தரப்பட்டுள்ளது. விவசாய இடுபொருள்கள் வாங்க ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக 70 சதவீத மானியம் தரப்படுகிறது.

100 மருந்துக் கடைகள்

கூட்டுறவு சார்பில் மாநிலத்தில் 100 மருந்துக்கடைகளும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 5 கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக 12 சதவீதம் தள்ளுபடியில் மருந்துகள் விற்கப்படுகின்றன. மைக்ரோ பைனான்ஸ் செய்வதற்காக 159 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இப்கோட-டோக்கியோ நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இ-பேங்கிங்

நாட்டிலேயே முதன்முறையாக தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளில் இ-பேங்கிங் முறை தொடங்கப்படுகிறது என்றார் அமைச்சர். பின்னர் அழகானந்தல் கூட்டுறவு கடன் சங்க கட்டடப் பணிகளை ஆய்வு செய்த அவர் 15 பேருக்கு ரூ.2.1 லட்சம் கடனுதவியை வழங்கினார்.

இணைப்பதிவாளர் மா.குழந்தைவேலு, மத்திய வங்கி தனி அலுவலர் கா.ஜெயம், பொதுமேலாளர் மகபூப்பாஷா, துணைப்பதிவாளர்கள் நடராஜன், மனோகரன், மக்கள் தொடர்பு அலுவலர் பால.சக்திதாசன், மாநில தலைமை கூட்டுறவு வங்கி துணைப்பொதுமேலாளர் பாஸ்கர் ஆகியோர்உடனிருந்தனர்.

**"வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'**

First Published : 10 Dec 2011 11:03:04 AM IST

கிருஷ்ணகிரி, டிச. 9: விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் சி.என். மகேஸ்வரன் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பிள்ளேகொத்தூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி-இயந்திர நடவு முறை அறுவடை வயல் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்து, ஆட்சியர் பேசியது:

அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும்.

திட்டமிட்டு விவசாயம் செய்தால், விவசாயிகள் வாழ்வில் வளம் பெறுவர். எனவே, வேளாண்மையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கு மாவட்ட நிர்வாகம் அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றார்.

இதைத்தொடர்ந்து சிறந்த விவசாயிகள், கிராமங்கள், உழவர் மன்றங்களுக்கு ஆட்சியர் பரிசுகள் வழங்கினார்.


இதில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நீர் நுட்ப மைய இயக்குநர் மற்றும் நீர்வள நிலவளத் திட்ட முதன்மை அலுவலர் கி. செல்லமுத்து, தலைவர் பா.செ. பாண்டியன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய உழவியல் பேராசிரியர் எம்.என். புத்தர், பேராசிரியர் எஸ்.விஜய பாஸ்கரன், நபார்டு வங்கி உதவி மேலாளர் சிதம்பரநாதன், வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் டி. சுந்தர்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நடப்பு 2011-12ம் பருவத்தில் காபி உற்பத்தி 3.22 லட்சம் டன்னாக அதிகரிக்கும்**

டிசம்பர் 10,2011,00:31



நடப்பு பருவத்தில், நாட்டின் காபி உற்பத்தி, 3 லட்சத்து 22 ஆயிரத்து 250 டன்னாக அதிகரிக்கும் என, காபி வாரியம் மதிப்பீடு செ#துள்ளது.உலகில் அதிகளவில் காபி உற்பத்தி செ#யும் நாடுகளில் ஒன்றாக, இந்தியா விளங்குகிறது. சென்ற 2010-11ம் ஆண்டின் காபி பருவத்தில், (அக்டோபர் - செப்டம்பர்) 3 லட்சத்து 2 ஆயிரம் டன் காபி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இது, நடப்பு 2011-12ம் ஆண்டு காபி பருவத்தில், 6.7 சதவீதம் வளர்ச்சி கண்டு, 3 லட்சத்து 22 ஆயிரத்து 250 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் பெ#த மழைக்கு பிறகான ஈரப்பதம், காபி பயிர் செழித்து வளர்வதற்கு உதவி புரிந்துள்ளது. இதனால் நடப்பு காபி பருவத்தில், உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மொத்த காபி உற்பத்தியில், அரபிகா வகை காபி உற்பத்தி 11 சதவீதம் உயர்ந்து, சென்ற ஆண்டை விட 10 ஆயிரத்து 385 டன் அதிகரித்து, 1 லட்சத்து 4 ஆயிரத்து 525 டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ரோபஸ்டா வகை காபி உற்பத்தி, 4.75 சதவீதம் வளர்ச்சி கண்டு, 2 லட்சத்து 17 ஆயிரத்து 725 டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக, காபி வாரிய தலைவர் ஜாவத் அக்தர் தெரிவித்தார்.

நாட்டின், மொத்த காபி உற்பத்தியில், கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இந்த மாநிலத்தில், காபி விளையும் மூன்று மாவட்டங்களிலும் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த இரு இடங்களில் கேரளம், தமிழகம் உள்ளன.ஆந்திரா, ஒடிசா ஆகிய மாநிலங்களில், புதிய பகுதிகளில் காபி பயிரிடப்பட்டு வருகிறது. காபி விளையும் பகுதிகளில் மிதமான மழையுடன், சாதகமான பருவ நிலை காணப்படுகிறது. இதனால், உற்பத்தியாகும் காபியின் தரம் சிறப்பாக உள்ளதால், நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகாவில், அரபிகா வகை காபி 82 ஆயிரத்து 250 டன்னாகவும், ரோபஸ்டா வகை காபி 1 லட்சத்து 45 ஆயிரத்து 425 டன் என்ற அளவிலும், மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 675 டன் காபி உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.கேரளாவிலும், காபி பயிர் வளர்வதற்கு சாதகமான சூழ்நிலை இருப்பதால், நடப்பு பருவத்தில் காபி உற்பத்தி, 5.3 சதவீதம் (3 ஆயிரத்து 475 டன்) வளர்ச்சி கண்டு, 69 ஆயிரத்து 125 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டின் உற்பத்தி குறித்த, இறுதி மதிப்பீட்டை விட அதிகம்.

தமிழகத்திலும் காபி விளைச்சலுக்கு சாதகமான பருவ நிலை காணப்படுகிறது. இதனால், நடப்பு பருவத்தில் காபி உற்பத்தி, கடந்த பருவத்தை விட, 11.3 சதவீதம் (1,890 டன்) வளர்ச்சி கண்டு, 18 ஆயிரத்து 540 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த பருவத்தில், காபி

உற்பத்தி, 16 ஆயிரத்து 650 டன்னாக இருக்கும் என, இறுதி மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதிதாக காபி பயிரிடப்பட்டு வரும் ஆந்திரா, ஒடிசா மற்றும் வடகிழக்கு பகுதிகளில், அதன் உற்பத்தி, 6,910 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த பருவத்தில், காபி உற்பத்தி 5,920 டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், காபி உற்பத்தியில் ஆந்திரா முதலிடத்திலும், ஒடிசா இரண்டாவது இடத்திலும் உள்ளன. தென் மாநிலங்களை தவிர்த்து, வட மாநிலங்களிலும் காபி பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்து வருகிறது. காபி பயன்பாட்டில், வடமாநிலங்கள், 40 சதவீத வளர்ச்சியைக் கண்டு வருகின்றன. மதிப்பு கூட்டப்பட்ட, காபி வகைகளின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதன் வாயிலாக, இத்துறையில் ஏராளமான வேலை வா#ப்பு பெருகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு"ஜாக்பாட்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2011,01:37 IST

மதுரை:நவீன தொழில் நுட்பத்தை பின்பற்றும் விவசாயிகளுக்கு, மத்திய சிறு, குறுந்தொழில்கள் அமைச்சகத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.கோவை வேளாண் பல்கலையில், வேளாண் தொழில்முனைவோர் இயக்கத்தின் மேம்பாட்டு மையம் செயல்படுகிறது. மையம் மூலம் விவசாயம், தோட்டக்கலை, விவசாயம் சார்ந்த துறைகளில் புதிய தொழில்நுட்பத்தை புகுத்துபவர்களுக்கான சிறப்பு முகாம், மதுரை விவசாயக் கல்லூரியில் டிச.,15ல் நடக்கிறது. ஆர்வமுள்ளவர்கள், பெயர், முகவரி, தொலைபேசி எண்ணுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: மண் மற்றும் சுற்றுச்சூழல் துறை, விவசாயக் கல்லூரி, ஒத்தகடை, மதுரை - 625 104. போன்:96883 78528.

**இயந்திரங்கள் மூலம் கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு அழைப்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2011,22:36 IST

தேனி : விவசாய இயந்திரங்கள் மூலம் சாகுபடி செய்ய பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்குமாறு, விவசாய பொறியியல் துறை அழைப்பு விடுத்துள்ளது.

தேனி விவசாய பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் வாசுதேவன் கூறியதாவது: விவசாய பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைப்பது சிரமமாக இருப்பதால், விவசாய இயந்திரங்கள் மூலம் கரும்பு சாகுபடி செய்து அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. கடமலைக்குண்டு லா தொண்டு நிறுவன வளாகத்தில் நடக்கும் இந்த பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்ட, 40 வயதுக்கு உட்பட்ட தமிழில் எழுதப்படிக்க தெரிந்த விவசாயிகள் பங்கேற்கலாம்.பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு உணவும், ஊக்கத்தொகையும் வழங்கப்படும். டிச. 12 முதல் டிச., 24 பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ள விவசாயிகள் தேனியில் மதுரை ரோட்டில் சார்நிலை கருவூலம் அருகே உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்என்றார்.

**விதைக்கிராம திட்ட பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,23:35 IST

கும்பகோணம்: வண்டுவாஞ்சேரி பஞ்சாயத்தில் விதைக்கிராமதிட்ட பயிற்சி முகாமை மாவட்ட பஞ்., கவுன்சிலர் சூரியமூர்த்தி தொடங்கி வைத்தார்.கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூர் தாலுக்கா வண்டுவாஞ்சேரி கிராமத்தில் விதைக்கிராம திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் தஞ்சை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட பஞ்., கவுன்சிலர் சூரியமூர்த்தி பயிற்சி முகாமை தொடங்கி வைத்தார். வேளாண்மை துணை இயக்குனர் ரவீந்திரன் விதை தரமானதாக தயாரிப்பது எப்படி என்பது பற்றியும், விதை ஆய்வு பற்றியும் விரிவாக விளக்கி பேசினார்.விதை சான்றுத்துறை உதவி இயக்குனர் பாண்டியராஜ், விதைகள் சான்று பெறுவது பற்றியும் தரமான விதை பற்றியும் பேசினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார்.மாநில திட்டம் வேளாண் அலுவலர் ஈஸ்வர், திருந்திய நெல் சாகுபடியில் பூச்சி நோய் நிர்வாகத்தை பற்றி தெரிவித்தார். விவசாயிகள் பயிற்சியில் தமிழக அரசின் பிரதிநிதியாக பஞ்., தலைவர் சரவணன் அனைத்து விவசாயிகளையும் ஊக்குவித்து பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி பேசினார்.மாத்தூர் ஒன்றியக்குழு உறுப்பினர் நமச்சிவாயம், மாத்தூர் முன்னாள் பஞ்., தலைவர் இமாகிரேட்சார்லஸ், செம்மங்குடி முன்னாள் பஞ்., தலைவர் ஸ்டாலின், வண்டுவாஞ்சேரி மதிவாணன் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளின் பங்கு குறித்து பேசினர்.வேளாண்மை உதவி அலுவலர் கோபாலகிருஷ்ணன் பயிற்சி முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தார். வேளாண் அலுவலர் செல்வராஜ் கருத்துக்காட்சி அமைத்து தொழில்நுட்பம் குறித்து பேசினார்.

## பயிர் இழப்பீடு தொகை நிறுத்தி வைப்பு முதுகுளத்தூர் விவசாயிகள் பரிதவிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,22:02 IST

முதுகுளத்தூர் : முதுகுளத்தூரில் பாதிக்கப்பட்ட நெல் விவசாயத்திற்கு வழங்கபட்ட இழப்பீடு தொகை நிறுத்தி வைக்கபட்டுள்ளது. இதை எதிர்பார்த்து சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். கடந்த 2009-10ல் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதியில் கனமழையால் பாதிக்கபட்ட நெல் விவசாயத்திற்கு இழப்பீட்டு தொகை கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்க உத்தரவிடப்பட்டது. ஆனால் கூட்டுறவு வங்கிகளிலும், விவசாயிகள் கொடுத்த போலியான ஆதாரங்களாலும் இடையிடையே இழப்பீட்டு தொகை பட்டுவாடா நிறுத்தப்பட்டது. ஆனால் முதுகுளத்தூர் அருகே பூக்குளம், ஓரிவயல், ஏ.புனவாசல் கூட்டுறவு சங்கங்களில் இழப்பீட்டு தொகை வழங்காமல் நிறுத்தி வைக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. போலிகளும், முறைகேடுகளும் கண்டறியபட்ட பின்னரே வழங்கபடும் என அறிவித்தது. ஆறு மாதங்களாகியும் இழப்பீடு தொகை வழங்கப்படவில்லை. விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் பரிதவிக்கும் விவசாயிகள், "ஒரு கோடி ரூபாய் இழப்பீடு தொகையை உடனே வழங்க' மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.